**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.**

S.C.No.3/2016

Deposition of witness – PW19

| | | | |
|---|---|---|---|
| Name | : ராணி | Caste | : |
| W/o. | : மாது | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 15.12.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A1 and A2 present.

முதல் விசாரணை;

நான் ராசிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் என்னுடைய மகள், மருமகன், பேத்தி ஆகிய மூவரும் கொண்டலாம்பட்டியிலிருந்து இருசக்கர வாகனத்தில் ஆதார் அட்டை எடுப்பதற்காக எனது வீட்டிற்கு வருவதற்காக கிளம்பி வந்ததாகவும் அப்போது காலை 9.00 மணி அளவில் ஒரு மணல் லாரி நாமக்கல்லிலிருந்து சேலம் நோக்கி சென்று கொண்டிருந்தபோது ஜோதி பேருந்து ராசிபுரத்திலிருந்து சேலம் நோக்கி வந்ததாகவும்,

அப்போது சந்தியூர் ஆட்டையாம்பட்டி அருகே என்னுடைய மருமகன் ராஜா, மகள் சரோஜா, பேத்தி தனலட்சுமி ஆகியோர் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மணல் லாரி மோதியதால் என்னுடைய மருமகன் ராஜா, மகள் சரோஜா ஆகியோர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், என்னுடைய பேத்தி தனலட்சுமி மணலுக்குள் புதைந்து இருந்ததாகவும், அங்கிருந்தவர்கள் மணலுக்குள் எனது பேத்தி தனலட்சுமியை தேடி அவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், அரசு மருத்துவமனையில் எனது பேத்தி இறந்துவிட்டதாக மருத்துவர்கள் சொன்னதாகவும் எனது உறவினர்கள் எனக்கு போனில் தகவல் சொன்னார்கள், உடனே நானும் எனது மகன் மற்றும் உறவினர்களும் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தபோது என்னுடைய மகள் மற்றும் மருமகனின் பிரேதத்தை பார்த்தேன். என் மகளுக்கு முகம் முழுவதும் நசுங்கிவிட்டது, கையும், காலும் இல்லை, எனது மருமகனுக்கும் தலையில் காயம் இருந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/– S.Sumathy,
Principal Sessions Judge, Salem.